பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
03 10 2025 FRIDAY 6.30 PM
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- உற்பத்திக்கான முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- கச்சத்தீவு விவகாரத்தில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசை கேள்வி கேட்கும் தார்மீக உரிமை திமுகவுக்கும், காங்கிரஸ்-க்கும் இல்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- கீழடி அருங்காட்சியகத்தை இதுவரை 12 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் ராகுல், ஜடேஜா மற்றும் துருவ் சதம் அடித்தனர்.

>>>>>><<<<<<

உற்பத்திக்கான முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொம்மை முதல் ராணுவ தளவாடங்கள் வரை அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதை சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 24 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் இது 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழக மீனவர்களுக்கு துரோகம் செய்த திமுகவுக்கும், காங்கிரசுக்கும் மத்திய அரசை கேள்வி கேட்கும் தார்மீக உரிமை இல்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசியல் ஆதாயத்திற்காக, மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியும், அப்போது தமிழக முதலமைச்சர் பொறுப்பில் இருந்த மு.கருணாநிதியும் இணைந்து, கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்ததாக கூறியுள்ளார்.

உண்மை நிலை இவ்வாறாக இருக்க, ராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், கச்சத்தீவு பிரச்சினை பற்றி முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மத்திய அரசை குறைகூறி பேசியிருப்பது நகைப்புக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் உடனடியாக மீட்கப்படுவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களையும் மீட்டு வந்த பெருமை, பிரதமர் திரு. நரேந்திர மோடியையே சாரும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கீழடி அருங்காட்சியகத்தை இதுவரை 12 லட்சம் பேர் பார்வையிட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த அருங்காட்சியகத்தை பார்வையிட்ட பின்னர், சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

கீழடியில் திறந்தவெளி அருங்காட்சியகமும் ஜனவரி மாதம் திறக்கப்படவுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பொருநை அருங்காட்சியகம் டிசம்பர் மாதம் திறக்கப்படவுள்ளதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திமுக அரசின் பாதுகாப்பு குறைபாடுகளை சுட்டிக்காட்டினால், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், அதிலும் அரசியல் செய்வதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ராமநாதபுரம் அரசு நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து தெரிவித்த அரசியல் கருத்துக்கள் ஏற்புடையதல்ல என்று தெரிவித்தார்.

கரூருக்கு சென்ற முதலமைச்சர், கள்ளக்குறிச்சி மற்றும் வேங்கைவயலுக்கு செல்லாதது ஏன் என்றும் அவர் வினவியுள்ளார்.

சென்னை விமான சாகச நிகழ்ச்சியின் போது உயிரிழந்த பார்வையாளர்களின் இல்லங்களுக்கு முதலமைச்சர் செல்லாததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து துறைகளிலும் திமுக அரசு தோல்வியடைந்துள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கரூர் உயிரிழப்பு சம்பவத்திற்கு திமுக அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுகவின் திறனற்ற நிர்வாகத்தால் நேர்ந்த தவறை மறைக்க மத்திய அரசின் மீது வீண்பழி போட முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முயற்சிப்பதாகவும் குறை கூறியுள்ளார்.

இயற்கை பேரிடர்களால் தமிழகம் அவதியுற்ற போது, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டது மறந்துவிட்டதா? என்றும் அவர் வினவியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பேரிடர் நிதியாக தமிழகத்திற்கு 13 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை ஒதுக்கியதை முதலமைச்சர் மறைக்கப் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எத்தகைய போலி குற்றச்சாட்டுகளை தெரிவித்தாலும், கரூர் சம்பவத்திற்கு திமுக அரசின் திறனற்ற நிர்வாகமே காரணம் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு, சிறப்பு புலனாய்வுக் குழுவை ஏற்படுத்தி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான பொதுநல மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு.செந்தில்குமார் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

வடக்கு மண்டல ஐஜி திரு. *Asra Garg* தலைமையில் இந்தக் குழு அமைக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கரூர் காவல்துறையினர் உடனடியாக சிறப்பு விசாரணைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது, த.வெ.க-விற்கும் கடும் கண்டனங்களை நீதிபதி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

இதற்கிடையே, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவினை விசாரணை செய்த சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இம்மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. தண்டபாணி, திரு. ஜோதிராமன் ஆகியோர் கொண்ட அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

பொதுக்கூட்டங்களை நடத்துவது தொடர்பாக நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கும்வரை இந்த தடையுத்தரவு செயல்பாட்டில் இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உட்பட்ட 10 மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட்பைட் – செந்தாமரை 52 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழையினால் மின்சார விநியோகம் தடைபடாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான கூடுதல் முதன்மைச் செயலர் திரு. ஜெ. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று விழுப்புரத்தில் இதுதொடர்பாக ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - ராதாகிருஷ்ணன் 57 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

சென்னை அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சிப் பிரிவு தலைவராக திரு. ராமசாமி சுதர்ஸன் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டத்தில் 2 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருச்சியில் கட்டப்பட்டு வரும் கல்லூரி மாணவிகளுக்கான சமூகநீதி விடுதிக்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன் இன்று ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் இந்துசமய அறநிலையத்துறையின் மண்டல இணை ஆணையருக்கான தற்காலிக அலுவலகத்தை மாநில அமைச்சர் திரு. நாசர் இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

மயிலாடுதுறை மாவட்டம், பல்லவராயன் பேட்டையில் உள்ள ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டவது நாளான இன்று, ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 448 ரன் எடுத்துள்ளது.

ஜடேஜா சதம் அடித்து 104 ரன்னுடனும், வாஷிங்டன் சுந்தர் 9 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

கே.எல்.ராகுல் 100 ரன்னுக்கும், துருவ் 125 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

வெஸ்ட் இண்டீஸ் முதல் இன்னிங்ஸில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<<

*Al Ain* மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Shriyanshi Valishetty* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், *18-21, 21-19, 21-16,* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Devika Sihag*-ஐ வென்றார்.

>>>>>>END<<<<<<<